**தலாவ பிரதேச சபை**
**அநுராதபுர ரமாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலாவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரை ரூபா 2,401,498 தொகையான நீதிமன்ற தண்ட வருமானம் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடனுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,013,806 வட்டிச் செலவினமாக இனங்காணப்படாமை காரணமாக செலவினம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தலாவ பொது வியாபார கடைத்தொகுதியின் நிர்மாணத்தின் கிரயம் பெறுமதி சேர் வரியுடன் ரூபா 31,620,454 ஆக இருந்த போதிலும் காணி மற்றுமு் கட்டிடக் கணக்கில் அப்பெறுமதி ரூபா 19,250,868 என கணக்கீடு செய்த காரணத்தினால் ஐந்தொகையில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு ரூபா 12,369,586 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 1,979,927 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 04 செயற்திட்டங்களின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படாமையால் நிர்மானக் கடன்பட்டோர் ரூபா 961,773 ஆல் அதிகரித்து நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 995,734 ஆல் குறைத்தும் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் மாகாண வீதி அபிவிருத்தி வாரத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 3,760,130 ஆன சுகாதார வேலைத்திட்டங்கள் சேவைக்கான பெறுவனவுகளாக கணக்கீடு செய்த காரத்தினால் செயற்பாட்டு வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டின் இறுதியில் மீளச்செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,639,000 முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருந்த நிலுவை வீதவரி பெறுமதி மற்றும் பட்டோலையின் பிரகாரம் கணக்கிடப்பட்ட நிலுவை வீத வரி வருமானத்திற்கு இடையே ரூபா 128,014 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத பொறப்புக்களில் கீழ் காண்பிக்கபடப்டிருந்த உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் பெறுமதி மற்றும் பஅதற்குரிய பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் காண்பிக்கப்படும் கடன் பெறுமதிக்கு இடையே ரூபா 1,237,749 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 2,200,726 ஆக இருந்த போதிலும் கேள்வி பிணை வைப்பு பேரேட்டில் அம்மீதி ரூபா 2,149,719 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 51,007 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 36,026 தொகையான பெறவேண்டிய 04 கடன் மீதிகள் முறையாக இனங்காணப்பட்டு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 125,629,026 தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | |
| (i) 177 ஆம் பிரிவு | சபையில் சேவை புரிகின்ற தற்காலிக மற்றும் அமைய உத்தியோகத்தர்கள் சபையின் சேவை பூர்த்தி செய்த போது அவர்களுக்குரிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக முன்மொழிவு முறைமையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) 182 ஆம் பிரிவு

பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 384,700 ஆன கைத்தொழில் மற்றும் வியாபார வரி பிரதான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

**1.3.5.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் சேவைகளை வழங்கி அறவிடப்படும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருந்த ரூபா 262,273 கூட்டுத்தொகையான வரித் தொகை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க விஷேட முத்திரை கட்டண சட்டத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டிலும் மீளர்யவாண்டிலும் அறவிடப்பட்ட ரூபா 143,125 கூட்டுத்தொகையான முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,371,569 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,849,605ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 5,387,281 | 2,080,444 | 5,387,281 | 1,599,201 | 5,835,685 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 8,577,140 | 7,801,067 | 8,577,140 | 6,000,000 | 10,378,206 |
| முத்திரைக் கட்டணங்கள் | 222,000 | - | - | - | 222,000 |
| அனுமதிப் பத்திரங்கள் | 472,500 | 518,350 | 142,550 | 87,490 | - |
| வியாபார வரி | 3,200,000 | 4,789,774 | 523,200 | 561,600 | - |
| கடை வாடகை | 1,182,640 | 1,204,560 | 3,047,495 | 226,975 | 583,280 |
| மொத்தம் | 19,041,561 | 16,394,195 | 17,677,666 | 8,475,266 | 17,019,171 |

### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 15,503,033 ஆக இருந்ததுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் இந்நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.ாமல் சேரும் வீதவரி முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் எப்ரல் மாதம் வரை நீதிமன்ற தண்டப்பணம் வருமானம் இனங்காணப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,378,207 தொகையான நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ரூபா 3,502,840 ஆன முத்திரை கட்டணங்கள் மாகாண திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டுமீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வட மத்திய மாகாண பிரதான அமைச்சரால் 2016 மார்ச் 30 ஆந் திகதிய 1960/35 ஆம் இலக்க அதிவிஷேட மாகாண சபை வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட 10 விடயங்களுக்குரிய பொது உறுப்புரை சபையினால் பின்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்த உப உறுப்புரை நியதிகள் பின்பற்றப்பட்டதாக வர்த்தமானிப் பத்திரமொன்றில் வெளியிடப்பட்டு அது சட்டரீதியாக செயற்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயற்படுத்தப்படாத பணிகள்

மீளாய்வாண்டில் ரூபா 7,381,000 ஆன நிதி ஏற்பாட்டின் பேரில் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 37 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சேதனப்பசளை உற்பத்தி மற்றும் விற்பனைக்கான வேலைத்திட்டமொன்று 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பிளிசறு செயற்திட்டத்திற்காக கழிவுப்பொருள் வகைப்படுத்தப்படாமல் கொண்டு வரப்படுவதால் கழிவுப் பொருட்களை வேறாக்குவதற்காக சபைக்கு மேலதிக காலமொன்றும் கிரயமொன்றையும் செலவிட நேர்ந்தது.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருந்திருந்த போதிலும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நீண்ட காலத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் 06 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானத்தின் 50 சதவீதத்திலிருந்து 267 சதவீதம் வரையான விலகலொன்று இடம்பெற்றிருந்ததுடன் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 41 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களைச் செயற்படுத்துதல்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளதுவரையாக பராமரிக்கப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | ஆவணங்களுக்கு உட்படுத்தாமை. |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | i வெற்றிடங்கள் நிரப்பபடாமை<br>ii நிரந்தர பதவிகளுக்குரிய கடமைகளுக்கு புறம்பான கடமைகளில் ஈடுபடுத்துதல் |
| (உ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | i காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை<br>ii கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்படாமை |